பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 09 2024 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆசிய - பசிபிக் மண்டல சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர்கள் மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று பங்கேற்கிறார்.

2. மகளிரின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் கட்டுமானக்கருவிகள் உற்பத்தி நிலையங்களை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அமெரிக்காவின் கேட்டர் பில்லர் நிறுவனத்துடன் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.

4. பங்களாதேஷ் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு அரசியலமைப்பு சீர்திருத்தம் அவசியம் என்று அந்நாட்டு இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் பேராசிரியர் முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

5. சிங்கப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>>**

ஆசிய - பசிபிக் மண்டல சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று பங்கேற்கிறார்.

புதுதில்லியில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி மாநாட்டு பிரகடனத்தை வெளியிடுகிறார்.

இந்த மாநாட்டில் 41 நாடுகளைச் சேர்ந்த 250-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

ஆசிய – பசிபிக் மண்டலத்தில் விமான போக்குவரத்து சேவைகளை மேம்படுத்துவது தொடர்பாக இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

**<<<<<<>>>>>**

மகளிர் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் கோவையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், பிரதமரின் வங்கிக்கணக்குத் திட்டத்தின்கீழ், 60 சதவீதம் பெண்கள் பயன்பெற்று வருவதாக கூறினார்.

நாடு முழுவதும் இத்திட்டத்தின்கீழ் 58 கோடி வங்கிக்கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், இதில் பெண்கள் மட்டும் 29 புள்ளி ஆறு கோடி வங்கிக்கணக்குகளை கையாண்டு வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - நிர்மலா – 40 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தமது ஜெர்மன் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று ஸ்விட்சர்லாந்து செல்கிறார்.

அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்து திரு ஜெய்சங்கர் பேச்சு வார்த்தை மேற்கொள்கிறார்.

மேலும், ஜெனிவாவில் உள்ள சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்து அவர் ஆலோசனை நடத்தவுள்ளார்.

முன்னதாக, ஜெர்மன் பிரதமர் திரு **olaf scholz**-யை சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து திரு ஜெய்சங்கர் பேச்சு நடத்தினார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இருநாட்டு அரசுகளுக்கு இடையேயான ஏழாவது ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்க ஜெர்மன் பிரதமர் இந்தியா வருவதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு போரிஸ் பிஸ்டோரியஸை தாம் சந்தித்து பேசியதாகவும், இருநாட்டு உறவு மேம்பாடு அடைந்துள்ளதற்கு தமது பாராட்டுகளை தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக, பெர்லினில் சாஞ்சி ஸ்தூபியின் வடிவில் அமைக்கப்பட்டுள்ள நினைவு தூணையும் தாம் பார்வையிட்டதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும், ஜம்மு காஷ்மீரின் மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கலும் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறுகிறது.

மனுக்களை திரும்பப்பெற வரும் 16-ஆம் தேதி கடைசி நாளாகும்.

ஹரியானா சட்டப்பேரவையில் மொத்தம் உள்ள 90 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் ஐந்தாம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

ஜம்மு-கஷ்மீரில் மூன்றாவது மற்றும் இறுதிக்கட்டமாக 40 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இத்தொகுதிகளில் வேட்புமனுக்களை திரும்பப்பெற வரும் 17-ஆம் தேதி கடைசிநாளாகும்.

ஜம்மு காஷ்மீரில் முதல்கட்ட தேர்தல் வரும் 18-ஆம் தேதியும், இரண்டாம் கட்டத்தேர்தல் 25-ஆம் தேதியும் நடைபெறுகிறது.

இதனிடையே, ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலுக்கான 19 பேர் கொண்ட ஆறாவது வேட்பாளர் பட்டியலை ஆம் ஆத்மி கட்சி இன்று வெளியிட்டுள்ளது.

<<<<<<>>>>>

காவிரி ஒழுங்காற்றுக் குழுக் கூட்டம் தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

ஒழுங்காற்றுக்குழு தலைவர் திரு வினித் குப்தா தலைமையில் நடைபெற்றுவரும் இக்கூட்டத்தில் தமிழகம், கர்நாடகா மற்றும் புதுச்சேரியின் அரசு அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<>>>>>

ஆந்திராவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

வெள்ள பாதிப்புக்கு உள்ளான எலுரு, கொள்ளேரு உள்ளிட்ட மாவட்டங்களில் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

இதுதொடர்பாக, அதிகாரிகளுடன் அவர் மேற்கொண்ட ஆய்வுக்கூட்டத்தில், விவசாயிகளுக்கு பயிர் இழப்பீடாக, ஹெக்டேர் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

குத்தகை விவசாயிகளுக்கு மானியம் நேரடியாக வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும் என்று அவர் கூறினார்.

இதன் தொடர்ச்சியாக இன்றும் பாபத்லா மாவட்டத்தில் வெள்ள பாதிப்பு குறித்து திரு சந்திரபாபு நாயுடு ஆய்வு மேற்கொள்ள இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை திரு அனில் சுப்பிரமணியம் தலைமையிலான மத்திய நிபுணர் குழு இன்றும் பார்வையிட உள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள கட்டுமானக்கருவிகள் உற்பத்தி நிலையங்களை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அமெரிக்காவின் கேட்டர் பில்லர் நிறுவனத்துடன் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது

அமெரிக்காவின் சிகாகோவில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாகவும், இந்த விரிவாக்கப்பணி 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையும் என்று மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மாணவர்கள் விளையாட்டுத்துறையில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும் என்று தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவ, மாணவியருக்கு பரிசுகளை வழங்கி இன்று அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - அன்பில் - 40 செகண்ட்ஸ்)*

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், அரசுப்பள்ளி வளாகங்களுக்குள் அத்துமீறி நுழைவதை தடுக்கும் வகையில் விதிமுறைகள் வகுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பள்ளி மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ், 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுற்றுச்சுவர், கழிவறை கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக அமைச்சர் கூறினார்.

கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் நீதி போதனை வகுப்புகளால் மாணவர்கள் பயனடைந்துள்ளதாகவும் அத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளதாகவும் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில், பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் வெடிபொருட்கள், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

உளவு தகவலின் அடிப்படையில், ஜம்மு காஷ்மீர் காவல்துறையுடன் இணைந்து இந்த கூட்டு நடவடிக்கையை மேற்கொண்டதாக ராணுவம் தெரிவித்துள்ளது.

இதில் நவீன ரக துப்பாக்கிகள், வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் கூறியுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் தற்போதைய சூழலை கருத்தில்கொண்டு அங்கு அமைதி நிலவும் வகையில் பாதுகாப்புப்படையினர் செயல்பட்டு வருவதாகவும் ராணுவம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

பங்களாதேஷ் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு அரசியலமைப்பு சீர்திருத்தம் அவசியம் என்று அந்நாட்டு இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் பேராசிரியர் முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், சீர்திருத்த திட்டம் தொடர்பாக ஆறு ஆணையங்களை அமைக்க இடைக்கால அரசு முடிவெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பு, தேர்தல் அமைப்பு, நீதி, காவல்துறை, ஊழல் தடுப்பு, பொது நிர்வாகம் தொடர்பாக இந்த ஆணையங்கள் ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல், இந்த ஆணையங்கள் செயல்படத் தொடங்கும் என்றும், அதற்கு அடுத்த மூன்று மாதங்களில் அவற்றின் பணி முடிவடையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த ஆணையங்கள் தரும் அறிக்கையின் அடிப்படையில், அரசியல் கட்சிகளுடன் இடைக்கால அரசு பேச்சுவார்த்தை நடத்தும் என்றும் பேராசிரியர் முகமது யூனுஸ் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

## *விளையாட்டுச் செய்திகள்*

சிங்கப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-2 என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Anri Nagata** –வை வென்றார்.

----------------

ஆசிய சாம்பியன் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி, சீனாவின் **hulunbuir**-யில் பிற்பகல் மணி 1-15-க்கு தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியா ஏற்கனவே அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<>>>>>**